ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்குடந்தை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்குடந்தை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – வேலிக்கோல்

கொங்கும் குடந்தையும் ⋆
கோட்டியூரும் பேரும் ⋆
எங்கும் திரிந்து ⋆
விளையாடும் என் மகன் ⋆
சங்கம் பிடிக்கும் ⋆
தடக்கைக்குத் தக்க ⋆
நல் அங்கம் உடையதோர் கோல் கொண்டு வா ! ⋆
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டு வா ‖ **2.6.2** ‖

ஆலத்திலையான் ⋆
அரவின் அணை மேலான் ⋆
நீலக் கடலுள் ⋆
நெடுங்காலம் கண் வளர்ந்தான் ⋆
பாலப் பிராயத்தே ⋆
பார்த்தர்க்கருள் செய்த ⋆
கோலப் பிரானுக்கோர் கோல் கொண்டு வா ! ⋆
குடந்தைக் கிடந்தாற்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.6** ‖

## பெரியாழ்வார் திருமொழி – ஆனிரை

குடங்கள் எடுத்தேற விட்டுக் ⋆
கூத்தாட வல்ல எம் கோவே ! ⋆
மடங்கொள் மதிமுகத்தாரை ⋆
மால்செய்ய வல்ல என் மைந்தா ! ⋆
இடந்திட்டிரணியன் நெஞ்சை ⋆
இரு பிளவாக முன் கீண்டாய் ! ⋆
குடந்தைக் கிடந்த எம் கோவே ! ⋆
குருக்கத்திப் பூச் சூட்ட வாராய் ‖ **2.7.7** ‖

## நாச்சியார் திருமொழி – கண்ணனென்னும்

பால் ஆலிலையில் துயில் கொண்ட ⋆
பரமன் வலைப் பட்டிருந்தேனை ⋆
வேலால் துன்னம் பெய்தாற் போல் ⋆
வேண்டிற்றெல்லாம் பேசாதே ⋆
கோலால் நிரை மேய்த்தாயனாய்க் ⋆
குடந்தைக் கிடந்த குடம் ஆடி ⋆
நீலார் தண்ணந் துழாய் கொண்டு ⋆
என் நெறி மென் குழல் மேல் சூட்டீரே ‖ **13.2** ‖

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

இலங்கை மன்னன் ஐந்தொடைந்து ⋆
பைந்தலை நிலத்துக ⋆
கலங்க அன்று சென்று கொன்று ⋆
வென்றி கொண்ட வீரனே ⋆
விலங்கு நூலர் வேத நாவர் ⋆
நீதியான கேள்வியார் ⋆

வலங்கொளக் குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ॥ **56** ॥

சங்கு தங்கு முன்கை நங்கை ⋆
கொங்கை தங்கல் உற்றவன் ⋆
அங்கம் மங்க அன்று சென்று ⋆
அடர்த்தெறிந்த ஆழியான் ⋆
கொங்கு தங்கு வார் குழல் ⋆
மடந்தைமார் குடைந்த நீர் ⋆
பொங்கு தண் குடந்தையுள் ⋆
கிடந்த புண்டரீகனே ! ॥ **57** ॥

மரம் கெட நடந்தடர்த்து ⋆
மத்த யானை மத்தகத்து ⋆
உரம் கெடப் புடைத்து ⋆
ஓர் கொம்பொசித்துகந்த உத்தமா ⋆
துரங்கம் வாய் பிளந்து ⋆
மண் அளந்த பாத ⋆
வேதியர் வரம் கொளக் குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ॥ **58** ॥

சாலி வேலி தண் வயல் ⋆
தடங்கிடங்கு பூம்பொழில் ⋆
கோல மாடநீடு ⋆
தண் குடந்தை மேய கோவலா ⋆
காலநேமி வக்கரன் ⋆
கரன் முரன் சிரம் அவை ⋆

காலனோடு கூட ⋆
விற் குனித்த விற் கை வீரனே ! ‖ **59** ‖

‡ செழுங்கொழும் பெரும்பனி ⋆
பொழிந்திட ⋆
உயர்ந்த வேய் விழுந்துலர்ந்தெழுந்து ⋆
விண் புடைக்கும் வேங்கடத்துள் நின்று ⋆
எழுந்திருந்து தேன் பொருந்து ⋆
பூம்பொழில் தழைக் கொழும் ⋆
செழுந் தடங்குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ‖ **60** ‖

‡ நடந்த கால்கள் நொந்தவோ ⋆
நடுங்க ஞாலம் ஏனமாய் ⋆
இடந்த மெய் குலுங்கவோ ⋆
விலங்கு மால் வரைச் சுரம் ⋆
கடந்த கால் பரந்த ⋆
காவிரிக் கரைக் குடந்தையுள் ⋆
கிடந்தவாறெழுந்திருந்து பேசு ⋆
வாழி கேசனே ! ‖ **61** ‖

## பெரிய திருமொழி – வாடினேன்

‡ ஆவியே ! அமுதே ! என நினைந்துருகி ⋆
அவர் அவர் பணை முலை துணையாப் ⋆
பாவியேன் உணராதெத்தனை பகலும் ⋆
பழுது போய் ஒழிந்தன நாள்கள் ⋆
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுது ⋆

என் நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.2** ॥

இற்பிறப்பறியீர் இவர் அவர் என்னீர் ⋆
இன்னதோர் தன்மை என்றுணரீர் ⋆
கற்பகம் புலவர் களைகண் என்றுலகில் ⋆
கண்டவா தொண்டரைப் பாடும் ⋆
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுமின் ⋆
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின் ⋆
நாராயணா என்னும் நாமம் ॥ **1.1.7** ॥

## பெரிய திருமொழி – கலையும் கரியும்

ஊரான் குடந்தை உத்தமன் ⋆
ஒரு கால் இரு கால் சிலை வளையத் ⋆
தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் ⋆
வற்றா வரு புனல் சூழ் பேரான் ⋆
பேர் ஆயிரம் உடையான் ⋆
பிறங்கு சிறை வண்டறைகின்ற தாரான் ⋆
தாரா வயல் சூழ்ந்த ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.4** ॥

## பெரிய திருமொழி – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆

இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.1** ‖

## பெரிய திருமொழி – தூவிரிய

வாள் ஆய கண் பனிப்ப ⋆
மென் முலைகள் பொன் அரும்ப ⋆
நாள் நாளும் ⋆
நின் நினைந்து நைவேற்கு ⋆
ஓ ! மண் அளந்த தாளாளா ! தண் குடந்தை நகர் ஆளா ! ⋆
வரை எடுத்த தோளாளா ⋆
என் தனக்கு ⋆
ஓர் துணையாளன் ஆகாயே ‖ **3.6.5** ‖

குயில் ஆலும் வளர் பொழில் சூழ் ⋆
தண் குடந்தைக் குடம் ஆடீ ⋆
துயிலாத கண் இணையேன் ⋆
நின் நினைந்து துயர்வேனோ ! ⋆
முயல் ஆலும் இள மதிக்கே ⋆
வளை இழந்தேற்கு ⋆
இது நடுவே வயல் ஆலி மணவாளா ! ⋆
கொள்வாயோ மணி நிறமே ‖ **3.6.8** ‖

## பெரிய திருமொழி – வெருவாதாள்

வார் ஆளும் இளங்கொங்கை ⋆
வண்ணம் வேறாயினவாறெண்ணாள் ⋆

எண்ணில் பேர் ஆளன் பேர் அல்லால் பேசாள் ⋆
இப் பெண் பெற்றேன் என் செய்கேன் நான் ⋆
தார் ஆளன் தண் குடந்தை நகர் ஆளன் ⋆
ஐவர்க்காய் அமரில் உய்த்த தேர் ஆளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் செப்புகேனே ‖ **5.5.7** ‖

## பெரிய திருமொழி – மான் கொண்ட

‡ பொங்கேறு நீள் சோதிப் ⋆
பொன் ஆழி தன்னோடும் ⋆
சங்கேறு கோலத் ⋆
தடக் கைப் பெருமானை ⋆
கொங்கேறு சோலைக் ⋆
குடந்தைக் கிடந்தானை ⋆
நங்கோனை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.9** ‖

## பெரிய திருமொழி – கிடந்த நம்பி

‡ கிடந்த நம்பி குடந்தை மேவிக் ⋆
கேழல் ஆய் உலகை இடந்த நம்பி ⋆
எங்கள் நம்பி ⋆
எறிஞர் அரண் அழிய ⋆
கடந்த நம்பி கடி ஆர் இலங்கை ⋆
உலகை ஈர் அடியால் ⋆
நடந்த நம்பி நாமம் சொல்லில் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.1** ‖

## பெரிய திருமொழி – சினவில்

வந்த நாள் வந்தென் நெஞ்சிடம் கொண்டான் ⋆
மற்றோர் நெஞ்சறியான் ⋆ அடியேனுடைச் சிந்தை
ஆய் வந்து தென் புலர்க்கென்னைச் சேர் கொடான் ⋆
இது சிக்கெனப் பெற்றேன் ⋆
கொந்துலாம் பொழில் சூழ் குடந்தைத் தலைக் கோவினைக் ⋆
குடம் ஆடிய கூத்தனை ⋆
எந்தையை எந்தை தந்தை தம்மானை ⋆
எம்பிரானை எத்தால் மறக்கேனே ॥ **7.3.3** ॥

## பெரிய திருமொழி – சிங்கமதாய்

‡ பேரானைக் ⋆
குடந்தைப் பெருமானை ⋆
இலங்கொளி சேர் வாரார் வனமுலையாள் ⋆
மலர் மங்கை நாயகனை ⋆
ஆரா இன் அமுதைத் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
கார் ஆர் கருமுகிலைக் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.9** ॥

## பெரிய திருமொழி – கைம்மானம்

வந்தாய் என் மனத்தே ⋆
வந்து நீ புகுந்த பின்னை ⋆
எந்தாய் ! போய் அறியாய் ⋆
இதுவே அமையாதோ ⋆
கொந்தார் பைம் பொழில் சூழ் ⋆
குடந்தைக் கிடந்துகந்த மைந்தா ⋆

உன்னை என்றும் ⋆
மறவாமைப் பெற்றேனே ‖ **8.9.5** ‖

## பெரிய திருமொழி – பொன்னிவர் மேனி

தோடவிழ் நீலம் மணம் கொடுக்கும் ⋆
சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த ⋆
சேடர் கொல் என்று தெரிக்க மாட்டேன் ⋆
செஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி ⋆
பாடக மெல் அடியார் வணங்கப் ⋆
பன் மணி முத்தொடிலங்கு சோதி ⋆
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.2** ‖

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

வானை ஆர் அமுதம் ⋆
தந்த வள்ளலை ⋆
தேனை நீள் வயல் ⋆
சேறையில் கண்டு போய் ⋆
ஆனை வாட்டி அருளும் ⋆
அமரர் தம் கோனை ⋆
யாம் குடந்தைச் ⋆
சென்று காண்டுமே ‖ **10.1.6** ‖

## பெரிய திருமொழி – திருத்தாய்

இங்கே போதுங்கொலோ ⋆
இன வேல் நெடுங்கண் களிப்ப ⋆
கொங்கார் சோலைக் ⋆

குடந்தைக் கிடந்த மால் ⋆
இங்கே போதுங்கொலோ ॥ **10.10.8** ॥

### பெரிய திருமொழி – மன்னிலங்கு

அறியோமே என்று ⋆
உரைக்கலாமே எமக்கு ⋆
வெறியார் பொழில் சூழ் ⋆
வியன் குடந்தை மேவி ⋆
சிறியான் ஓர் பிள்ளையாய் ⋆
மெள்ள நடந்திட்டு ⋆
உறியார் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்தார் தம்மையே ॥ **11.3.4** ॥

### பெரிய திருமொழி – மைந்நின்ற

அண்டத்தின் முகடழுந்த ⋆
அலை முந்நீர்த் திரை ததும்ப ஆ ! ஆ ! என்று ⋆
தொண்டர்க்கும் அமரர்க்கும் ⋆
முனிவர்க்கும் தான் அருளி ⋆
உலகம் ஏழும் உண்டொத்த திரு வயிற்றின் ⋆
அகம் படியில் வைத்தும்மை உய்யக் கொண்ட ⋆
கொண்டற்கை மணி வண்ணன் ⋆
தண் குடந்தை நகர் பாடி ஆடீர்களே ॥ **11.6.9** ॥

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

மூவரில் முதல்வன் ஆய ⋆
ஒருவனை உலகம் கொண்ட ⋆
கோவினைக் குடந்தை மேய ⋆

குரு மணித் திரளை ⋆
இன்பப் பாவினைப் பச்சைத் தேனைப் ⋆
பைம் பொன்னை அமரர் சென்னிப் பூவினை ⋆
புகழும் தொண்டர் ⋆
என் சொல்லிப் புகழ்வர் தாமே ॥ **6** ॥

காவியை வென்ற கண்ணார் ⋆
கலவியே கருதி ⋆
நாளும் பாவியேன் ஆக எண்ணி ⋆
அதனுள்ளே பழுத்தொழிந்தேன் ⋆
தூவி சேர் அன்னம் மன்னும் ⋆
சூழ் புனல் குடந்தை யானை ⋆
பாவியேன் பாவியாது ⋆
பாவியேன் ஆயினேனே ! ॥ **14** ॥

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

பொங்கார் மெல் இளங்கொங்கை பொன்னே பூப்பப் ⋆
பொரு கயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று ⋆
செங்கால மடப் புறவம் பெடைக்குப் பேசும் ⋆
சிறு குரலுக்குடல் உருகிச் சிந்தித்து ⋆
ஆங்கே தண் காலும் தண் குடந்தை நகரும் பாடித் ⋆
தண் கோவலூர் பாடி ஆடக் கேட்டு ⋆
நங்காய் ! நம் குடிக்கிதுவோ நன்மை என்ன ⋆
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே ! ॥ **17** ॥

முற்றாரா வன முலையாள் பாவை ⋆
மாயன் மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும் அற்றாள் ⋆
தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள் ⋆

அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ ! என்னும் ⋆
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள் ⋆
பேர் பாடித் தண் குடந்தை நகரும் பாடி ⋆
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள் ⋆
பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும் அஃதே ‖ **19** ‖

‡ அன்றாயர் குல மகளுக்கரையன் தன்னை ⋆
அலை கடலைக் கடைந்தடைத்த அம்மான் தன்னை ⋆
குன்றாத வலி அரக்கர் கோனை மாளக் ⋆
கொடும் சிலைவாய்ச் சரம் துரந்து குலம் களைந்து வென்றானை ⋆
குன்றெடுத்த தோளினானை ⋆
விரி திரை நீர் விண்ணகரம் மருவி நாளும் நின்றானை ⋆
தண் குடந்தைக் கிடந்த மாலை ⋆
நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேனே ‖ **29** ‖

## திருவாய்மொழி – ஆராவமுதே

‡ ஆரா அமுதே ! அடியேன் உடலம் ⋆
நின் பால் அன்பாயே ⋆
நீராய் அலைந்து கரைய ⋆
உருக்குகின்ற நெடுமாலே ⋆
சீரார் செந்நெல் கவரி வீசும் ⋆
செழு நீர்த் திருக்குடந்தை ⋆
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் ! ⋆
கண்டேன் எம்மானே ! ‖ **5.8.1** ‖

எம்மானே ! என் வெள்ளை மூர்த்தி ! ⋆
என்னை ஆள்வானே ⋆
எம்மா உருவும் வேண்டும் ஆற்றால் ⋆

ஆவாய் எழில் ஏறே ⋆
செம்மா கமலம் செழு நீர் மிசைக் கண் மலரும் ⋆
திருக்குடந்தை ⋆
அம்மா மலர்க் கண் வளர்கின்றானே ! ⋆
என்நான் செய்கேனே ! ॥ **5.8.2** ॥

என் நான் செய்கேன் ! யாரே களை கண் ⋆
என்னை என் செய்கின்றாய் ⋆
உன்னால் அல்லால் யாவராலும் ⋆
ஒன்றும் குறை வேண்டேன் ⋆
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய் ! ⋆
அடியேன் அரு வாணாள் ⋆
சென்னாள் எந்நாள் அந்நாள் ⋆
உனதாள் பிடித்தே செலக்காணே ॥ **5.8.3** ॥

செலக் காண்கிற்பார் காணும் அளவும் ⋆
செல்லும் கீர்த்தியாய் ⋆
உலப்பிலானே ! ⋆
எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி ⋆
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய் ! ⋆
உன்னைக் காண்பான் நான் அலப்பாய் ⋆
ஆகாசத்தை நோக்கி ⋆
அழுவன் தொழுவனே ॥ **5.8.4** ॥

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் ⋆
பாடி அலற்றுவன் ⋆
தழுவல் வினையால் பக்கம் நோக்கி ⋆
நாணிக் கவிழ்ந்திருப்பன் ⋆

செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய் ! ⋆
செந் தாமரைக் கண்ணா ! ⋆
தொழுவனேனை உனதாள் ⋆
சேரும் வகையே சூழ் கண்டாய் ॥ **5.8.5** ॥

சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து ⋆
உன் அடிசேரும் ஊழ் கண்டிருந்தே ⋆
தூராக்குழி தூர்த்து ⋆
எனை நாள் அகன்றிருப்பன் ⋆
வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய் ! ⋆
வானோர் கோமானே ⋆
யாழின் இசையே ! அமுதே ! ⋆
அறிவின் பயனே ! அரியேறே ! ॥ **5.8.6** ॥

அரியேறே ! என்னம் பொற்சுடரே ! ⋆
செங்கண் கரு முகிலே ! ⋆
எரியே ! பவளக் குன்றே ! ⋆
நால் தோள் எந்தாய் ! உனதருளே ⋆
பிரியா அடிமை என்னைக் கொண்டாய் ⋆
குடந்தைத் திருமாலே ⋆
தரியேன் இனி உன் சரணம் தந்து ⋆
என் சன்மம் களையாயே ॥ **5.8.7** ॥

களைவாய் துன்பம் களையாதொழிவாய் ⋆
களை கண் மற்றிலேன் ⋆
வளை வாய் நேமிப் படையாய் ! ⋆
குடந்தைக் கிடந்த மா மாயா ⋆
தளரா உடலம் எனதாவி ⋆

சரிந்து போம் போது ⋆
இளையாதுன தாள் ஒருங்கப் பிடித்துப் ⋆
போத இசை நீயே ‖ **5.8.8** ‖

இசைவித்தென்னை உன் தாள் இணைக் கீழ் ⋆
இருத்தும் அம்மானே ⋆
அசைவில் அமரர் தலைவர் தலைவா ⋆
ஆதிப் பெரு மூர்த்தி ⋆
திசை வில் வீசும் செழு மா மணிகள் சேரும் ⋆
திருக்குடந்தை ⋆
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய் ! ⋆
காண வாராயே ‖ **5.8.9** ‖

‡ வாரா அருவாய் வருமென் மாயா ! ⋆
மாயா மூர்த்தியாய் ⋆
ஆரா அமுதாய் அடியேன் ஆவி ⋆
அகமே தித்திப்பாய் ⋆
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய் ! ⋆
திருக்குடந்தை ஊரா ! ⋆
உனக்காட் பட்டும் ⋆
அடியேன் இன்னம் உழல்வேனோ ‖ **5.8.10** ‖

‡ உழலை என்பின் பேய்ச்சி முலை ஊடு ⋆
அவளை உயிர் உண்டான் ⋆
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
குழலின் மலியச் சொன்ன ⋆
ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் ⋆

மழலை தீர வல்லார் ⋆
காமர் மானேய் நோக்கியர்க்கே ॥ **5.8.11** ॥

### பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

தமர் உள்ளம் தஞ்சை ⋆
தலை அரங்கம் தண் கால் ⋆
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை ⋆
தமர் உள்ளும் மாமல்லை கோவல் ⋆
மதிட்குடந்தை என்பரே ⋆
ஏவல்ல எந்தைக் கிடம் ॥ **70** ॥

எங்கள் பெருமான் ⋆
இமையோர் தலைமகன் ! நீ ⋆
செங்கண் நெடுமால் திருமார்பா ⋆
பொங்கு பட மூக்கின் ஆயிர வாய்ப் ⋆
பாம்பணை மேல் சேர்ந்தாய் ⋆
குடமூக்கில் கோயிலாக் கொண்டு ॥ **97** ॥

### பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

சேர்ந்த திருமால் ⋆
கடல் குடந்தை வேங்கடம் ⋆
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும் ⋆
வாய்ந்த மறை பாடகம் அனந்தன் ⋆
வண் துழாய்க் கண்ணி ⋆
இறைபாடி ஆய இவை ॥ **30** ॥

விண்ணகரம் வெஃகா ⋆
விரி திரை நீர் வேங்கடம் ⋆

மண் நகரம் மா மாட வேளுக்கை ⋆
மண்ணகத்த தென் குடந்தை ⋆
தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி ⋆
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு ‖ **62** ‖

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

‡ நாகத்தணைக் குடந்தை ⋆
வெஃகா திருவெவ்வுள் ⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில் ⋆
நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும் ⋆
ஆதி நெடுமால் ⋆
அணைப்பார் கருத்தன் ஆவான் ‖ **36** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருவெழுகூற்றிருக்கை

‡ ஒரு பேர் உந்தி இரு மலர்த் தவிசில் ⋆
ஒரு முறை அயனை ஈன்றனை ⋆
ஒரு முறை இரு சுடர் மீதினில் இயங்கா ⋆
மும் மதிள் இலங்கை இரு கால் வளைய ⋆
ஒரு சிலை ஒன்றிய ஈர் எயிற்றழல் வாய் வாளியின் அட்டனை ⋆
மூவடி நானிலம் வேண்டி ⋆
முப்புரி நூலொடு மான் உரி இலங்கு மார்வினின் ⋆
இரு பிறப்பொரு மாண் ஆகி ⋆
ஒரு முறை ஈர் அடி மூவுலகளந்தனை ⋆
நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவை ஏறி ⋆
நால் வாய் மும் மதத்திரு செவி ஒரு தனி வேழத்தரந்தையை ⋆
ஒரு நாள் இரு நீர் மடுவுள் தீர்த்தனை ⋆
முத்தீ நான் மறை ஐ வகை வேள்வி ⋆

அறு தொழில் அந்தணர் வணங்கும் தன்மையை ⋆
ஐம் புலன் அகத்தினுள் செறுத்து ⋆
நான்குடன் அடக்கி முக் குணத்திரண்டவை அகற்றி ⋆
ஒன்றினில் ஒன்றி நின்று ⋆
ஆங்கிரு பிறப்பறுப்போர் அறியும் தன்மையை ⋆
முக் கண் நால் தோள் ஐ வாய் அரவோடு ⋆ ஆறு பொதி
சடையோன் அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை ⋆
ஏழ் உலகெயிற்றினில் கொண்டனை ⋆
கூறிய அறு சுவைப் பயனும் ஆயினை ⋆
சுடர் விடும் ஐம் படை அங்கையுள் அமர்ந்தனை ⋆
சுந்தர நால் தோள் முந்நீர் வண்ண ⋆
நின் ஈர் அடி ஒன்றிய மனத்தால் ⋆
ஒரு மதி முகத்து மங்கையர் இருவரும் மலர் அன ⋆
அங்கையின் முப்பொழுதும் வருட அறி துயில் அமர்ந்தனை ⋆
நெறி முறை நால் வகை வருணமும் ஆயினை ⋆
மேதகும் ஐம் பெரும் பூதமும் நீயே ⋆
அறுபத முரலும் கூந்தல் காரணம் ⋆
ஏழ் விடை அடங்கச் செற்றனை ⋆
அறு வகைச் சமயமும் அறிவரு நிலையினை ⋆
ஐம்பால் ஓதியை ஆகத்திருத்தினை ⋆
அறம் முதல் நான்கவையாய் மூர்த்தி மூன்றாய் ⋆
இரு வகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து நின்றனை ⋆
குன்றா மது மலர்ச் சோலை வண் கொடிப் படப்பை ⋆
வரு புனல் பொன்னி மா மணி அலைக்கும் ⋆
செந்நெல் ஒண் கழனித் திகழ் வனம் உடுத்த ⋆
கற்போர் புரிசைக் கனக மாளிகை ⋆

நிமிர் கொடி விசும்பில் இளம் பிறை துவக்கும் ⋆
‡அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க ⋆
ஆடரவமளியில் அறி துயில் அமர்ந்த பரம ⋆ நின் அடி இணை
பணிவன் வரும் இடர் அகல மாற்றோ வினையே ‖ **1** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

தாமரை மேல்
மின் இடையாள் நாயகனை விண்ணகருள் பொன் மலையை ⋆
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை ⋆
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை ⋆
மன்னிய தண் சேறை வள்ளலை ‖ **62** ‖

திரு கோமளவல்லி சமேத சார்ங்கபாணீ திருவடிகளே சரணம்